**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

**O.S. No.**162/2019

2024 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 09 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.2 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**<u>நாள் : 09.12.2024</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணிமாறன் | ஜாதி | : | |
| த/பெயர் | : | கோவிந்தசாமி | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

வா.<u>சா. 2 முன்னிலை பிரதிவாதி தரப்பில் குறுக்க விசாரணை</u>

வாதி என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் பாசன வாய்க்காலுக்காக தாக்கல் செய்துள்ளார். எந்த சர்வே எண்ணில் பாசன வாய்க்கால் உள்ளது என்றால் 325/5ல் உள்ளது. பாசன வாய்க்காலின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. வாதிக்கு தாவா சொத்து சொந்தமானது என்பதற்குரிய வருவாய் ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. பாசன வாய்க்கால் இருக்கிறது என்பதற்குண்டான வருவாய் ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கை மணிமேகலை தாக்கல் செய்துள்ளார். அவர் எனக்கு நெருங்கிய உறவினர் ஆவார். எனது நிலத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. எனது பெயரில் சொத்து இல்லை. என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போல் எனக்கு சொந்தமான சொத்திற்கு பட்டா மற்றும் சிட்டா இல்லை என்றால் ஞாபகமில்லை. என் சொத்தின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது.வாதிக்கு சொந்தமான நிலத்தை தூர்த்துள்ளாரா என்றால் இல்லை. அந்த நிலத்திலுள்ள அனைத்து பகுதிகளிலும் சாகுபடி செய்து வருகிறார். நான் தாவா நிலத்தை பார்த்துள்ளேன்.

வாதி தனக்கு சொந்தமான இடத்தின் ஒரு பகுதியை குட்டையாகவும், மற்றொரு பகுதியை குட்டையிலிருந்த மண்ணை எடுத்து சம பகுதியாக மாற்றிவிட்டேன் என வழக்குரையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். என்னால் இதற்கு முன்னதாக தாவா நிலங்கள் அனைத்து சாகுபடி செய்துள்ளதாக சொல்லியுள்ளது தவறு என்றால் சரிதான். வாதி நிலத்திற்கு தெற்கு பக்கத்தில் எனக்கு சொந்தமான நிலம் உள்ளது. வாதி நிலத்திற்கு

தெற்கு பக்கத்தில் ரோடு செல்கிறது என்றால் சரிதான். இந்த நிலங்களுக்கு பாசன வசதிக்காக மேட்டு வாய்க்கால் உள்ளது என்றால் சரிதான். எந்த இடத்திலிருந்து மேட்டு வாய்க்கால் தொடங்குகிறது என்றால் பாமணியாற்றியிலிருந்து வருகிறது. அதுதான் பாசனத்திற்காக ஏற்படுத்ததென்றால் சரியல்ல. பாசனத்திற்கு சொக்கன் வாய்க்காலிருந்து தான் தண்ணீர் வருகிறது. வாதி நிலத்திற்கு வடக்கில் மாரிமுத்து நிலம் உள்ளது. மாரிமுத்து நிலத்திற்கு மேற்கு பக்கத்தில் மேட்டு வாய்க்கால் வருகிறது என்றால் சரிதான். மேட்டு வாய்க்கால் என்பது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி செல்கிறது என்றால் சரிதான். அந்த வாய்க்கால் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்து மீண்டும் கிழக்கு மேற்காக செல்கிறது என்றால் சரியல்ல. இந்த மேட்டுவாய்க்கால் வழியாக வாதி நிலத்திற்கு பாசனம் வருகிறது என்றால் சரியல்ல. சொக்கன் வாய்க்காலிருந்து தான் பாசனம் செல்கிறது.

வாதிக்கு சொந்தமான சொத்தின் நான்கெல்லையில் கிழக்கு மேற்காக செல்லும் பாசன வாய்க்கால் வடக்கு பக்கத்தில் வாதிக்கு நிலமுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. மாரிமுத்து நிலத்திற்கு கிழக்கு பக்கத்தில் குட்டையுள்ளது என்றால் சரிதான். வாதி இடத்திற்கு கிழக்காக புனிதா அவரது நிலத்தை தூர்த்து வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். அதற்கு மேற்கு பக்கத்தில் தான் மணிமேகலை அவருடைய இடத்தை குட்டையாக மாற்றியுள்ளார் என்றால் பகுதி குட்டையாகவும், பகுதி சாகுபடி நிலங்களாகவும் உள்ளது. குட்டையை வெட்டிய மண்ணை எடுத்துதான் மற்றொரு பகுதியில் போட்டு அந்த நிலத்தை தூர்த்துள்ளார் என்றால் சரியல்ல. சாகுபடி செய்து வருகிறார். நான் விவசாயம் செய்து வருகிறேனா என்றால் இல்லை. வாதி மணிமேகலை நிலத்திற்கு தெற்கு பக்கத்தில் எனக்க நிலம் கிடையாது. எனது முதல்விசாரணையில் மாரிமுத்து நிலத்திற்கு வடக்கில் கிழக்கு மேற்காக ஒரு பாசன வாய்க்கால் உள்ளது என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

அது சொக்கன் வாய்க்கால் ஆகும். நான் சொல்வதுபோல் அது பாசன வாய்க்கால் அல்ல என்றாலும், மேட்டு வாய்க்காலிருந்து பிரியக்கூடிய கிளை வாய்க்கால் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் வடக்கு தெற்கில் எந்தவிதமான பாசன வாய்க்காலும் பூமியில் இல்லை என்றால் சரியல்ல. பாசன வாய்க்கால் உள்ளது. அதன் அளவு எனக்கு தெரியாது. மணிமேகலை நிலத்திற்கு பக்கத்தில்ள னக்கு எந்தவிதமான நிலங்களும் இல்லை என்றாலும், அவர் எனது உறவினர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மாரிமுத்து வீட்டிற்கு பக்கத்தில் நான்

இருக்கிறேன் என்றால் சரிதான். மாரிமுத்து வீட்டையும் என் வீட்டிற்கும் இடையில் ஒரு வேலி இருந்தது என்றால் சரிதான். அந்த வேலியை அவர் தான் கட்டியுள்ளார். அந்த வேலி சாய்ந்த போது அதை மீண்டும் அவர் கட்ட வந்தபோது எனக்கும் அவருக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டதென்றால் சரிதான். அந்த விரோதத்தின் அடிப்படையில் தான் பிரதிவாதிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வேலி பிரச்சனைக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை. எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே இருந்த முன்விரோதத்தின் காரணமாக வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி நிலத்திற்கு பக்கத்தில் என் பெயரில் நிலங்கள் இல்லை என்றால் சரிதான். என் மகன் பெயரில் நிலம் உள்ளது.

என் பெயரிலள்ள நிலத்தின் சர்வே எண். விஸ்தீரணம், நான்கெல்லை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்தின் எந்த விவரமும் எனக்கு தெரியாமல் வாதி உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி சித்தப்பா மகனின் மனைவியாவார். அதனால் அவர் கேட்டுக்கொண்டதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எந்த தேதியில் என்ன பிரச்சனை நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.12.11 17:31:04 +0530

District Munsif
Mannargudi.